**Minutes of Public Hearing held on 25.07.2024 at 10:00 A.M. held in Nambi Mahal, Madurai old bypass road, Gangaikondan, Tirunelveli District with respect to the proposedproject of Thiru. K. Anantha Perumal,Rough Stone and Gravel Quarry over an extent of 6.60.5 Ha in S.F. Nos. 414/1, 415A/1A, & 415A/2A of Palamadai Village, Tirunelveli Taluk, Tirunelveli District.**

**Details of participants in this meeting**

| | | |
|---|---|---|
| Thiru. S.Kanna Karuppiah | : | Revenue Divisional Officer, Tirunelveli, Tirunelveli District. |
| Tmt. C. SuyambuThangarani | : | District Environmental Engineer, TNPC Board, Tirunevoli. |
| Public and Government Officials | : | Details are attached (Annexure-1) |

The public hearing under EIA Notification, 2006 for the proposed project of Thiru. K. Anantha Perumal, Rough Stone and Gravel Quarry over an extent of 6.60.5 Ha in S.F. Nos. 414/1, 415A/1A, & 415A/2A of Palamadai Village, Tirunelveli Taluk, Tirunelveli District.was conducted at Nambi Mahal, Madurai old bypass road, Gangaikondan, Tirunelveli District on 25.07.2024 at 10.00 A.M.

District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tirunelveli welcomed the Revenue Divisional Officer, Tirunelveli,Government officials, the public, and industry representatives who have attended the Public Hearing. She informed that the arrangements for the public hearing had been done as per the guidelines issued under EIA Notification 2006. She also stated that the views, suggestions and queries of the public will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority, Tamilnadu. she informed that the views, suggestions and queries of the public will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority, Tamilnadu.

Then the Environmental consultant of the project has made detailed presentation on the project of Thiru. K. Anantha PerumalRough Stone and Gravel Quarry to the Public along with Environmental Management plan by Power Point Presentation.

After that, Revenue Divisional Officer, Tirunelveli, has requested the public to express their views on the project orally or in writing. Hence also informed that the public views are recorded and will be sent to the government.

After that, the public has started expressingtheir views with respect to the project as follows.

**1. Mr. sundar, Kupukurichi Village:-**

He said that because of the establishment of this quarry, the area they depend on will be prosperous, and the lay people will go to their town for a job. He said that there are more than 25 people who work in the quarry and live in this area. So the public who have already been working in the quarry are now idle. So if a quarry is established in this area they are keen to go for quarry work. They will get employment with minimum daily wages of Rs.700/- to Rs.800/-. Educated students go to work in SIPCOT areas. Also there is high demand for stone and gravel. Therefore, he

welcomed the establishment of such quarries in his area on behalf of the people of the village.

**2. Mr. Ramesh, Rajapathi village:-**

He said that he was working as a driver and there was a high demand for construction materials in the surrounding area, but the availability of raw materials was low. Therefore, if permission is granted for the said quarry in our area, the cost of construction materials will be less, he said. So he requested permission for this quarry.

**3. Mr. Govindharaman, Rajapathi village:-**

He said that if such quarries are established, the people of our region will get employment opportunities. So he said it will be good if the quarry comes here.

**4. Mr. Masanamoorthy, Rajapathi village:-**

He expressed that more uneducated people, are more than educated people in the surrounding villages. All of them are coolies. But factories located in SIPCOT area do not provide employment to people above 40 years of age. Job opportunities are given only to youths. Therefore, if such a quarry is established in this area, all the old workers, drivers and construction workers will get employment. Therefore, he welcomed the said quarry on behalf of the people of the Rajapathi village.

**5. Mr. Kalyanasundaram, Rajavallipuram village:-**

He said that there is no harm to us due to the establishment of this quarry. Construction materials such as jelly and m-sand are brought from Thoothukudi District and cost of these materials will come down if quarry is located nearby here so that he is supporting the project.

**6. Mr. Madasamy, Naranammalpuram, Thalaiyuthu:-**

He said that such quarries will be established in our area so that construction materials will be available at cheaper prices and employment opportunities will be provided to two villagers and he welcomed this quarry.

**7. Mr. Selvaraj, Rajavallipuram village:-**

He said that the villages within 15KM the perimeter would progress if permission is granted to this quarry. He added that construction materials are available from 50KM away.If this quarry is established, construction materials will be available at a lower price. At least 50 trucks will run daily and 100 workers will get employment, he added. Therefore, the livelihood of the local people will improve, he said. So if permission is granted for this quarry, it would be very beneficial for the people around 25 KM.

**8. Mr. Raja, Kalaingar Colony:-**

He said that he is currently working as a driver and if this quarry is established, people in our area including me will get employment.

**9. Mr. Stephen, Rajavallipuram village:-**

He said that this quarry will provide livelihood to at least 50 people in our village. So he requested to set up this quarry in our area.

**10. Mr. Hari Prasad, Thalaiyuthu village:-**

He said that he is operating with 4 trucks, and if the said quarry is established in this area, there will be many job opportunities and he expressed his support for the establishment of the quarry.

**11. Mr. Kava Muthu, Dadanoothu village:-**

He said that water sources is affected and cracks are developed in houses due to such quarries. So he asked us not to set up a quarry here.

**12. Mr. Murugan, Nattamai Dadanoothu village:-**

He said that agriculture is important for our village. We also maintain goats and cows as our important livestock. But after the expiry of the quarry lease period, they leave it as it is, adequate safety rings are not in place,therefore, while going to the quarry, the goats and cows fall into the quarry and die. Drinking water and water resources will be affected,so he requested not to give permission for the said quarry.

**13. Mr. Sudalaimani, Dadanoothu village:-**

He said our town is about 400 meters from the aforementioned quarry. He pointed out that it is located in the distance. Earlier, more than 10 quarries have been completed in this area. But due to insufficient maintenance, goats and cows fell and died in two quarries. Did both men fall to their deaths. Therefore, on behalf of the people of the town, he requested not to grant permission to this quarry.

**14. Mr. Iyyappan, Thalaiyuthu village:-**

He said that he is operating a truck and currently there is not enough load of materials available, and if the quarry is established, there is a possibility of getting more load for the truck. He also said that due to the establishment of the said quarry, there is a possibility of cheaper and easier access of construction materials and he would support this quarry. He also requested to grant permission for the quarry.

**15. Mr. Arun, Vallikottai village:-**

He expressed that in his town it is mostly a daily wage earner going to work everyday. And many people are going to work in many parts of Tamilnadu and neighboring state of Kerala. Therefore, when the above mentioned quarry is established in our area, employment opportunities will be available near the village. Hence, we can go to work from home in the morning and go home in the evening. Also the cost of building materials will be lower so that construction materials such as gravel and M. Sand can be obtained. Therefore, he requested to grant permission to set up the said quarry in his area.

**16. Mr. S.P. Muthuraman, Sankarnagar Village:-**

He expressed that there were two quarries which were already in operation near the existing quarry and the stone was taken and the quarry is left as it is. Environmental clearance is obtained before quarrying. But after mining is exhausted no one is monitoring the proper implementation of the "Mine Closure Plan of mining Department. The Tamil Nadu Environmental Impact Assessment Authority has been granting only environmental clearances, but no one cares on compliance of conditions of Environmental Clearancegiven by State Environmental Impact Assessment Authority.

Further, he said that in the quarries, the stone is taken from a depth of several feet,but do they leave it as it is without adequate fencing / safeguards so that goats and cows fall into the ditch and die. Humans fall and die. So what is the action for all this? This is because, according to the mine closure plan, after the period of quarrying operations, the perimeter is fenced off to prevent anyone from entering. Who monitors this? Who will take action? he asked.

In general, do the quarry project owners undertake to fulfill the conditions of the environmental clearance issued by the Environmental Impact Assessment Authority.But

no one fulfills and follows the conditions once the mining project is completed. Who will take action on this? Who has responsibility and tasks? In that case will the district revenue department take notice? Generally, the whole district is like this. Therefore, he requested to take appropriate steps to maintain the exhausted mined areas after the expiry of the mining lease.

Also, he expressed that in Gangaikondan region there was a "Deer Poonga". In the year 2013, the government has issued a notification as a Spotted Deer Sanctuary and all other sanctuaries located next to the forest. But this deer sanctuary is the only one within Gangaikondan town. There is a four-lane highway on one side and a railway line on the other side. After various periods of struggle, the road passing through it has now been repaired.

No deer live in the deer sanctuary, deer come into town. In that case, whether it is certain that the deer will not enter the quarry area, he asked. He asked what was certain that he would not fall into the quarries and die. If so who will take action on this? He added that there is no fence in one part of the sanctuary.Deers roam all over the place and they fall down and die. But the forest department does not take any action. Who is responsible for this? How many cases to file? Therefore, he requested that the revenue department should take appropriate action in this regard.

Further, he asked whether the gravel and sands available here are supplied only to Tirunelveli and Thoothukudi districts, No, the stones and gravel sands produced here are sent to Kerala. Can stone and soil be taken from Kerala? Why should we give up our resources, he asked. While they refuse to give even a drop of water from there, the mineral resources are transported to other states.

**17. Mr. Veeriyaperumal, Thalaiyuthu village:-**

He said that in the past, there were many quarries in this area. But now it is gradually declining and only small scale quarries are operating. But the demand for gravel and sand is high. But there are not enough quarries in this area to process them. Therefore, if new quarries are set up in this area and the production is increased, there will be a chance to get the necessary products for the people of the area. So he requested to grant permission to set up this quarry in this area.

**18. Mrs. Muthulakshmi, Rajapathi village:-**

She said that we used to work there when there was a quarry in this area. At present we are out of work due to the fact that the quarry is not in operation. Therefore, we will get employment opportunities, if permission is granted to this quarry. Hence, she wanted the quarry to come.

At the end of the meeting, a total number of 50 petitions (supporting petitions-48 and objection petitions-2) were given by the individual public to Revenue Divisional Officer, Tirunelveli and the meeting was concluded.

| | |
|---|---|
| **District Environmental Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Tirunelveli** | **Revenue Divisional Officer,<br>Tirunelveli.** |

**திருநெல்வேலி மாவட்டம்,திருநெல்வேலி வட்டம்,பாலமடை கிராமம், புல எண்கள். 414/1,415A/1A மற்றும் 415 A/2A, விஸ்தீரணம் 6.60.5 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள தி/ள். K.அனந்த பெருமாள் ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்து 25.07.2024 அன்று காலை 10.00 மணியளவில் திருநெல்வேலி மாவட்டம்,திருநெல்வேலி வட்டம், கங்கைகொண்டான் கிராமம்,நம்பி மஹாலில் வைத்து நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்.**

இக்கூட்டத்தில் பங்குபெற்றவர்களின் விபரம்

1. திரு.எஸ்.கண்ணா கருப்பையா - வருவாய் கோட்டாட்சியர், திருநெல்வேலி.
2. திருமதி. செ. சுயம்புதங்கராணி - மாவட்டசுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடுமாசுகட்டுப்பாடுவாரியம், திருநெல்வேலி.
3. பொதுமக்கள் மற்றும் அரசுஅதிகாரிகள் - பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.

******

திருநெல்வேலி மாவட்டம்,திருநெல்வேலி வட்டம், பாலமடை கிராமம், புல எண்கள். 414/1, 415A/1A மற்றும் 415A/2A, விஸ்தீரணம் 6.60.5 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள தி/ள். K. அனந்த பெருமாள் ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரிநிறுவனத்திற்கு, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின் கீழ் சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்காக, அப்பகுதி பொதுமக்களின் கருத்தினை அறிய பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம், திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி வட்டம்,கங்கைகொண்டான் கிராமம், நம்பி மஹாலில்25.07.2024 அன்று காலை 10.00 மணியளவில் துவங்கியது.

மாவட்டசுற்றுச்சூழல் பொறியாளர்,தமிழ்நாடுமாசுகட்டுப்பாடுவாரியம்,திருநெல்வேலிஅவர்கள் பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்திற்குதலைமையேற்கவருகைபுரிந்தவருவாய் கோட்டாட்சியர், திருநெல்வேலிஅவர்களையும், ஏனைய அரசு அதிகாரிகளையும்,பொதுமக்கள்,தொழில் நிறுவனத்தின் பிரதிநிதிகள் அனைவரையும் வரவேற்றார். மேலும் இந்தக் கூட்டத்திற்கான ஏற்பாடுகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006-ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இத்திட்டம் தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதி விளக்கவுரையாற்றி பின் பொதுமக்கள் தங்களது கருத்துக்களை வழங்கலாம் என தெரிவித்து, எழுத்துப்பூர்வமாக விண்ணப்பங்கள் வழங்க விரும்புவர்களும் அதனை வழங்கலாம் என தெரியப்படுத்தினார்.கூட்டத்திற்குவந்திருந்த பொதுமக்கள் கடைபிடிக்கவேண்டிய விதிமுறைகள் குறித்து எடுத்துரைத்து,திட்டம் குறித்தானபொதுமக்கள் தங்கள் கருத்துக்களைஅமைதியானமுறையில் ஒருவர் பின் ஒருவராக பெயர், ஊரினை தெரிவித்து, கருத்துக்களை பதிவு செய்யுமாறும் கேட்டுக்கொண்டார். மேலும், இத்திட்டம் தொடர்பாக நடைபெறும் கருத்துக் கேட்பு கூட்ட நடவடிக்கைகள் வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் குறிப்புகளுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவித்தார். பின்னர் வருவாய் கோட்டாட்சியர், திருநெல்வேலி அவர்களை பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு தலைமை தாங்கி துவக்கி வைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

பின்னர் தலைமையுரையாற்றிய வருவாய் கோட்டாட்சியர்,திருநெல்வேலிஅவர்கள் பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தில் கருத்தினை கூற விரும்புகிறவர்கள் ஒருவர் பின் ஒருவராக தங்களது கருத்துக்களை தெரிவிக்குமாறும், தொழிற் திட்டம் தொடர்பான

விளக்கங்களை, தொழிற் நிறுவனம் சார்பில் பொதுமக்களிடம் விளக்குமாறு கேட்டுக்கொண்டு, கூட்டம் துவங்குவதாக அறிவித்தார்.

அதன்பின்தி/எ். K. அனந்த பெருமாள் ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரிநிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர், இத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் இது தொடர்பான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் புள்ளிவிளக்ககாட்சி(Power Point Presentation) மூலம் பொதுமக்களுக்கு விவரித்தார்.

உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரியின் பரப்பளவானது 6.60.5 ஹெக்டேர் பரப்பளவுமற்றும்அருகில் 500 மீட்டர் சுற்றளவுக்குள் அமைந்துள்ளபிறகுவாரிகள் அமைந்துள்ள காரணத்தினால்,மத்தியசுற்றுச்சூழல் வழிகாட்டுதலின்படி,பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் நடத்தப்படவேண்டிய அவசியம் இருப்பதால், இக்கருத்துகேட்பு கூட்டம் நடத்தப்படுவதாகவும்,திட்டம் குறித்தசுற்றுச்சூழல் தாக்கமதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டிருந்தசர்வேஎண்,அமையவுள்ள ஊர்,அதன் பரப்பளவு,எவ்வளவுகிராவல் மற்றும் கற்கள் 5 வருடகாலத்தில் வெட்டிஎடுக்கப்படும்,அதனால் ஏற்படும் நன்மைதீமைகள் குறித்தவிரிவானவிளக்கங்களைபொதுமக்களுக்குவிளக்கி கூறினார்.

அதனைத் தொடர்ந்துமாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள்,பொதுமக்கள் இத்திட்டம் குறித்த தங்களதுகருத்தினை ஒருவர் பின் ஒருவராக தங்களுடைய பெயர் மற்றும் ஊரினை விவரமாக தெரிவித்து கருத்துகளை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

பின்னர், இக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட தொழிற்திட்டம் குறித்து, வாய்மொழியாக பொதுமக்களால் வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு,

1. <u>திரு. சுந்தர், குப்புகுறிச்சி</u>

இந்தக் குவாரி அமைவதால் தாங்கள் சார்ந்துள்ள பகுதி வளம் பெறும் என்றும், தங்கள் ஊரில் படிக்காக பாமர மக்கள் தான் நிறைய பேர் உள்ளதாகவும், குவாரியில் வேலை தெரிந்த சுமார் 25 நபர்களுக்கும் மேல் இவ்வூரில் வசிப்பதாகவும் தெரிவித்தார். எனவே ஏற்கனவே கல்குவாரியில் வேலை பார்த்து வந்த நபர்கள் தற்பொழுது சும்மாதான் இருக்கிறார்கள். எனவே இந்தப் பகுதியில் குவாரி அமையும் பட்சத்தில் அவர்கள் குவாரி வேலைக்கு செல்வதற்கு ஆர்வமாக உள்ளார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். தினசரி குறைந்த பட்சம் ரூ.700 முதல் 800 வரை அதிகமான வருமானம் கிடைக்கும் என்றும் தெரிவித்தார். படித்த மாணவர்கள் சிப்காட் பகுதிக்கு வேலைக்கு சென்று விடுகிறார்கள். மேலும் கல் மற்றும் ஜல்லிக்கு அதிக டிமாண்ட் உள்ளது. எனவே எங்கள் பகுதியில் இது போன்ற கல்குவாரிகள் அமைவதை எனது சார்பிலும் ஊர் பொதுமக்கள் சார்பிலும் வரவேற்பதாக தெரிவித்தார்.

2. <u>திரு. ரமேஷ், இராஜபதி கிராமம்</u>

தாம் ஒட்டுநராக பணியாற்றி வருவதாகவும், சுற்று வட்டார பகுதியில் கட்டுமானத்திற்கு தேவையான பொருட்கள் அதிக தேவை இருப்பதாகவும், ஆனால் அதற்கு தேவையான மூலப் பொருட்கள் குறைவாகவே கிடைப்பதாகவும் தெரிவித்தார். எனவே எங்கள் பகுதியில் மேற்படி குவாரிக்கு அனுமதி அளிக்கும் பட்சத்தில் கட்டுமானப் பொருட்களின் விலை கொஞ்சம் குறைவாக கிடைக்கும் என கூறினார். எனவே இந்த குவாரிக்கு அனுமதி வழங்கிட வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

3. திரு. கோவிந்தராமன், இராஜபதி கிராமம்

இது போன்ற குவாரிகள் அமையும் பட்சத்தில் எங்கள் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என தெரிவித்தார். எனவே இந்த குவாரி வந்தால் நன்றாக இருக்கும் என தெரிவித்தார்.

4. திரு. மாசானமூர்த்தி, இராஜபதி கிராமம்

இங்கு சுற்றியுள்ள கிராமங்களில் படித்த மக்களைவிட படிக்காத மக்களே அதிகம் வசிக்கின்றனர். அவர்கள் அனைவரும் கூலி வேலைக்குத் தான் செல்கிறார்கள். ஆனால் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு சிப்காட் வளாகத்தில் அமைந்துள்ள தொழிற்சாலைகள் வேலை வாய்ப்பு வழங்குவதில்லை. இளைஞர்களுக்கு மட்டுமே வேலை வாய்ப்பு வழங்கப்படுகிறது. எனவே வயதான பெரியோர்கள், ஓட்டுநர்கள், கட்டுமானப் பணியாளர்கள் அனைவருக்கும் இது போன்ற கல்குவாரி இப்பகுதியில் அமையும் பட்சத்தில் வேலை வாய்ப்பு கிடைக்கும். அன்றாட வாழ்வாதாரம் கிடைக்கும். எனவே மேற்படி கல்குவாரி அமைவதை ராஜபதி ஊர் மக்கள் சார்பில் வரவேற்பதாக தெரிவித்தார்.

5. திரு. கல்யாணசுந்தரம், இராஜவல்லிபுரம் கிராமம்

இந்த குவாரி அமைவதால் எங்களுக்கு ஒன்றும் பாதிப்பு இல்லை என தெரிவித்தார். தாம் கொத்தனார் வேலை செய்து வருவதாகவும், ஜல்லி, மண் போன்ற கட்டுமானப் பொருட்கள் அனைத்தும் தூத்துக்குடி மாவட்டத்தில் இருந்து தான் கொண்டு வருவதாகவும், இப்பகுதியில் அமையும் பட்சத்தில் மூலப் பொருட்கள் பக்கத்திலேயே கிடைக்கும் பட்சத்தில் விலை குறைவாக கிடைக்கும் என தெரிவித்து, குவாரி அமைவதற்கு ஆட்சேபனை இல்லை என தெரிவித்தார்.

6. திரு. மாடசாமி, நாரணம்மாள்புரம், தாழையூத்து

இந்த ஊரில் குடியேறி 35 வருடங்கள் ஆகிறது. தற்போது வீடு கட்டுவதற்கு அதிக பணம் தேவைப்படுகிறது. இது போன்ற கல்குவாரிகள் எங்கள் பகுதியில் அமைவதால் கட்டுமானப் பொருட்கள் விலை மலிவாக கிடைக்கும் என்றும், இரண்டு கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என தெரிவித்து, இந்த கல்குவாரியை வரவேற்பதாக கூறினார்.

7. திரு. செல்வராஜ், இராஜவல்லிபுரம் கிராமம்

இது போன்ற குவாரிக்கு அனுமதி அளித்தால் 15 கி.மீ . சுற்றளவுக்குள் உள்ள கிராமங்கள் முன்னேறும் என தெரிவித்தார். மேலும் தற்பொழுது 50 கி.மீ. அப்பால் இருந்து தான் கட்டுமானப் மூலப் பொருட்கள் கிடைப்பதாகவும் இந்தக் குவாரி அமையும் பட்சத்தில் கட்டுமானப் பொருட்கள் அருகிலேயே கிடைக்க வாய்ப்புள்ளதால் விலை குறைவாக கிடைக்கும் எனவும் தெரிவித்தார். குறைந்த பட்சம் தினசரி 50 லாரிகள் இயங்கும், 100 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் எனவும் தெரிவித்தார். எனவே உள்ளூர் மக்களின் வாழ்வாதாரம் மேம்படும் எனவும் தெரிவித்தார். எனவே இந்த குவாரிக்கு அனுமதி அளிக்கும் பட்சத்தில் 25 கி.மி. சுற்றளவுக்கு மக்கள் பயன் பெறுவார்கள் என தெரிவித்தார்.

8. திரு. ராஜா, கலைஞர் காலனி

தாம் தற்பொழுது ஓட்டுநராக பணியாற்றி வருவதாகவும், இந்தக் குவாரி அமையும் பட்சத்தில் நான் உட்பட எங்கள் பகுதியில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என தெரிவித்தார்.

9. திரு. ஸ்டீபன், இராஜவல்லிபுரம் கிராமம்

இந்த குவாரியால் குறைந்த பட்சம் எங்கள் ஊரில் 50 பேர்கள் வாழ வழி வகுக்கும். எனவே எங்கள் பகுதிக்கு இந்த குவாரி அமைய வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

10. திரு. ஹரி பிரசாத், தாழையூத்து கிராமம்

நாங்கள் 4 லாரிகள் வைத்து இயக்கி வருவதாகவும், இந்த பகுதியில் மேற்படி குவாரி அமையும் பட்சத்தில் நிறைய வேலை வாய்ப்புகள் கிடைக்கும் என தெரிவித்து,இந்த குவாரி அமைந்தால் நன்றாகயிருக்கும் என தெரிவித்தார்.

11. திரு. காவ முத்து,தாதனூத்து கிராமம்

இது போன்ற குவாரிகள் அமைவதால் நீர் ஆதாரம் பாதிக்கப்படுகிறது. வீடுகளில் கீறல் விழுகிறது. எனவே எங்கள் ஊர் அருகில் குவாரி அமைய வேண்டாம் என கேட்டுக்கொண்டார்.

12. திரு. முருகன், நாட்டாமை தாதனூத்து கிராமம்

எங்கள் ஊரின் பிரதான தொழில் விவசாயம் ஆகும். மேலும் ஆடு மாடுகள் எங்களுடைய முக்கியமான கால்நடைகளாக பராமரித்து வருகிறோம். ஆனால் குவாரி குத்தகை காலம் முடிந்தவுடன் அப்படியே விட்டு விட்டு சென்று விடுகின்றனர். போதிய பாதுகாப்பு வளையங்கள் அமைப்பது கிடையாது. ஆதலால் ஆடு மாடுகள் குவாரி பகுதிக்கு செல்லும் பொழுது தவறி உள்ளே விழுந்து இறந்து விடுகின்றன. குடிதண்ணீர் மற்றும் நீர் ஆதாரங்கள் பாதிக்கப்படும். எனவே மேற்படி குவாரிக்கு அனுமதி அளிக்க வேண்டாம் என அவரது கருத்தை பதிவு செய்வதாக குறிப்பிட்டார்.

13. திரு. சுடலைமணி, தாதனூத்து கிராமம்

மேற்படி அமையவுள்ள குவாரியிலிருந்து எங்களது ஊர் சுமார் 400 மீட்டர் தொலைவுக்குள்ளே அமைந்துள்ளதாக தெரிவித்தார். இந்த குவாரி அமைந்தால் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என தெரிவித்தார். இதற்கு முன்பு இந்த பகுதியில் சுமார் 10-க்கும் மேற்படி குவாரிகள் நடைபெற்று முடிந்து விட்டன. குவாரியில் போதிய பராமரிப்பு இல்லாத காரணத்தினால் இரண்டு குவாரிகளில் ஆடு மாடுகள் விழுந்து இறந்து விட்டன. இரண்டு ஆட்களும் விழுந்து இறந்துள்ளனர். எனவே மேற்படி அமையவுள்ள குவாரிக்கு ஆட்சேபனை தெரிவிப்பதாகவும், எனவே அனுமதி அளிக்க வேண்டாம் என ஊர் மக்கள் சார்பில் கேட்டுக்கொள்வதாக தெரிவித்தார்.

14. திரு. ஐயப்பன்,தாழையூத்து கிராமம்

நாங்கள் ஒரு லாரி வைத்து இயக்கி வருவதாகவும், தற்பொழுது போதிய லோடு கிடைக்கவில்லை எனவும், குவாரி அமையும் பட்சத்தில் அதிகமாக லாரிக்கு லோடு கிடைக்க வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் மேற்படி குவாரி அமைவதால் பொருளாதாரம் மேம்படும் எனவும் கட்டுமானப் பொருட்கள் விலை குறைவாக கிடைப்பதற்கும் எளிதாக வருவதற்கும் வாய்ப்பு உள்ளதாக தெரிவித்து குவாரி அமைவதற்கு ஆதரவு அளிப்பதாக தெரிவித்தார். மேலும் குவாரிக்கு அனுமதி அளிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

15. திரு. அருண், வல்லிக்கோட்டை கிராமம்

எங்கள் ஊரில் பெரும்பாலும் அன்றாடக் தினக்கூலிதான். அன்றாடம் கூப்பிடும் வேலைக்கு சென்று கொண்டுள்ளனர். மேலும் பலர் தமிழ்நாட்டின் பல பகுதி மற்றும் அண்டை மாநிலமான கேரளாவுக்கு வேலை காரணமாக சென்று வேலை செய்து வருகின்றனர். எனவே எங்கள் பகுதியில் மேற்படி குவாரி அமையும் பொழுது வேலை வாய்ப்பு என்பது ஊருக்கு அருகிலேயே கிடைத்து விடும். எனவே வீட்டிலிருந்து காலையில் வேலைக்குச் சென்று விட்டு சாயங்காலம் வீட்டிற்கு சென்று விடலாம். மேலும் கட்டுமானப் பொருட்களின் விலை குறைவாக கிடைக்கும். நினைத்த நேரத்தில் தேவையாக கட்டுமானப் பொருட்களான ஜல்லி மற்றும் எம். சேண்ட் பெற்றுக்கொள்ளலாம். எனவே எங்கள் பகுதிக்கு மேற்படி குவாரி அமைவதற்கு அனுமதி அளித்திட வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

16. திரு. S.P. முத்துராமன், சங்கர்நகர் கிராமம்

தற்பொழுது அமையவுள்ள குவாரிக்கு அருகில் ஏற்கனவே செயல்பாட்டில் இருந்த இரண்டு கல்குவாரிகள் இருந்ததாகவும், கல் எடுத்து விட்டு அப்படியே பராமரிப்பின்றி விட்டு சென்று விட்டதாகவும் தெரிவித்தார். கல் எடுப்பதற்கு முன்பு சுற்றுச்சூழல் அனுமதி பெறப்படுகிறது. ஆனால் கல் எடுத்து முடித்த பின் சுரங்கத் துறையின் "சுரங்க மூடுதல் திட்டம்" (Mining Closure Plan) -ஐ முறையாக செயல்படுத்துகிறார்களா என யாரும் கண்காணிப்பது கிடையாது. தமிழ்நாடு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சுற்றுச்சூழல் அனுமதி கொடுப்பதுடன் நிறுத்தி விடுகிறது. ஆனால் சுற்றுச்சூழல்தாக்க மதிப்பீட்டு ஆணையம் வழங்கிய நிபந்தனைகளை நிறைவேற்றுகிறார்களா இல்லையா என யாரும் பார்ப்பது இல்லை.

கல்குவாரியில் பல அடி ஆழத்தில் கல் எடுக்கிறார்கள். ஆனால் போதிய பராமரிப்பு இல்லாமல் அப்படியே விட்டு விட்டு சென்று விடுகின்றனர். அந்தப் பள்ளத்தில் ஆடு மாடுகள் விழுந்து இறக்கின்றன. மனிதர்கள் விழுந்து இறக்கிறார்கள். அவ்வாறெனில் இதற்கெல்லாம் என்ன நடவடிக்கை இருக்கிறது. சுரங்க மூடுதல் திட்டத்தின்படி, குவாரி பணிகளின் காலம் முடிந்த பிறகு சுற்றிலும் வேலி அமைத்து யாரும் உள்ளே நுழையாதவாறு பாதுகாப்பு ஏற்படுத்தாத காரணத்தினால் தான் இவ்வாறு ஏற்படுகிறது. யார் இதை கண்காணிப்பது? யார் நடவடிக்கை எடுப்பார்கள்? என வினவினார்.

பொதுவாக, குவாரி திட்ட உரிமையாளர்கள் அனுமதி வாங்குவதற்கு முன்பு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் மூலம் சுற்றுச்சூழல் அனுமதி வழங்கிய நிபந்தனைகளை நிறைவேற்றி விடுவோம் என உறுதியளிக்கின்றனர். ஆனால் குவாரி திட்டம் முடிவடைந்தவுடன் யாரும் நிபந்தனைகளை நிறைவேற்றுவதும் பின்பற்றுவதும் கிடையாது. இதற்கு யார் நடவடிக்கை எடுப்பது? யாருக்கு பொறுப்பு மற்றும் பணிகள் உள்ளது? அவ்வாறெனில் மாவட்ட வருவாய் துறை கவனிக்குமா? பொதுவாக மாவட்டம் முழுவதும் இவ்வாறே உள்ளது. எனவே சுரங்க குத்தகை காலம் முடிந்த பின்பு பராமரிப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

கங்கைகொண்டான் பகுதியில் மான்கள் பூங்கா என ஒன்று இருந்தது. 2013-ம் ஆண்டு புள்ளி மான்கள் சரணாலயம் என அரசால் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. மற்ற சரணாலயங்கள் அனைத்தும்வனத்தை ஒட்டியே அமைந்துள்ளன. ஆனால் இந்த மான்கள் சரணாலயம் மட்டும் கங்கை கொண்டான் ஊருக்குள் உள்ளது. அவற்றில் ஒரு புறம் நான்கு வழிச்சாலை மற்றொரு புறம் இரயில் வழிச் சாலை அமைந்துள்ளது. பல்வேறு கால கட்ட போராட்டத்திற்கு பின்பு தற்பொழுது அவ்வழியாக செல்லும் பிரதான சாலை பராமரிக்கப்பட்டுள்ளது.

மான்கள் சரணாலயத்தில் மான்கள் வசிப்பது கிடையாது. மான்கள் ஊருக்குள் வருகின்றன. அவ்வாறெனில் மான்கள் குவாரி பகுதிக்குள் போகாது என்பது என்ன நிச்சயம் என வினவினார். குவாரிகளில் விழுந்து இறந்து விடாது என என்ன நிச்சயம் என வினவினார். அவ்வாறெனில் இதற்கு யார் நடவடிக்கை எடுப்பது? சரணாலயத்தின் ஒரு பகுதியில் வேலியே கிடையாது என தெரிவித்தார். மான்கள் ஊர் எல்லாம் சுற்றி திரிகிறது என தெரிவித்தார். ஆங்காங்கே விழுந்து இறந்து விடுகின்றன. ஆனால் வனத் துறை அவற்றையெல்லாம் கண்டு கொள்வது கிடையாது. மான்கள் சரணாலயம் எனில் அதை சரியாக பராமரிக்க வேண்டுமா? வேண்டாமா? இதற்கு யார் பொறுப்பு? எத்தனை வழக்குகள் தான் போடுவது. எனவே இதற்கு வருவாய்த் துறை தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

மேலும் இங்கு கிடைக்கும் ஜல்லி மற்றும் மணல்கள் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களுக்கு மட்டுமா சப்ளை ஆகிறது. இல்லை. இங்கு உற்பத்தி செய்யப்படும் கற்கள் மற்றும் ஜல்லி மணல்கள் கேரளாவுக்கு கொண்டு செல்லப்படுகிறது. கேரளாவில் கல் மற்றும் மண் எடுக்க

முடியுமா? நாம் மட்டும் நம் வளங்களை ஏன் விட்டுக்கொடுக்க வேண்டும். அங்கிருந்து ஒரு சொட்டு தண்ணீர் கூட கொடுக்க மறுக்கிறார்கள். ஆனால் இங்கிருந்து கனிம வளங்கள் வேறு மாநிலத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது என தெரிவித்தார்.

17. திரு. வீரியப்பெருமாள், தாழையுத்து கிராமம்

இந்தப் பகுதியில் முன்பு அதிகமாக குவாரிகள் இயங்கி வந்தன. ஆனால் தற்பொழுது படிப்படியாக குறைந்து, குறைந்த அளவிலான குவாரிகளே இயங்கி வருகின்றன. ஆனால் ஜல்லி மற்றும் மணலின் தேவை அதிகமாக உள்ளது. ஆனால் அவற்றை பூர்த்தி செய்வதற்கு போதுமான குவாரிகள் இந்தப் பகுதியில் இல்லை. எனவே இந்தப் பகுதியில் புதிய குவாரிகள் அமைத்து உற்பத்தி அதிகமாக நடைபெற்றால் இப்பகுதி மக்களுக்கு தேவையான பொருட்கள் கிடைக்க வாய்ப்பாக இருக்கும். எனவே இந்தப் பகுதியில் இந்த குவாரி அமைவதற்கு அனுமதி கொடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

18. திருமதி. முத்துலெட்சுமி, இராஜபதி கிராமம்

இந்த பகுதியில் குவாரி இருக்கும் பொழுது நாங்கள் அங்குதான் வேலை பார்த்துக்கொண்டிருந்தோம். தற்பொழுது அந்த குவாரி இயக்கத்தில் இல்லாத காரணத்தினால் வேலையின்றி இருக்கிறோம். எனவே அமையவுள்ள குவாரிக்கு அனுமதி கொடுத்தால் எங்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும், எனவே குவாரி வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

கூட்ட முடிவில், பொதுமக்கள் தனித்தனியாக வருவாய் கோட்டாட்சியர், திருநெல்வேலி அவர்களிடம் மொத்தம் 50 மனுக்கள் (ஆதரவு மனுக்கள் 48 மற்றும் ஆட்சேபனை மனுக்கள் 2) அளித்தனர். இத்துடன் கூட்டம் நிறைவு செய்யப்பட்டது.

30/7/20.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திருநெல்வேலி.

வருவாய் கோட்டாட்சியர்,
திருநெல்வேலி.